செ.வெ.எண்: 385 நாள்: 31.5.2020

**புதுக்கோட்டை கவிநாடு கண்மாயில் ரூ.61 லட்சம் மதிப்பீட்டில் குடிமராமத்து திட்டப் பணிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் துவக்கி வைத்தார்.**

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (31.5.2020) புதுக்கோட்டை கவிநாடு கண்மாயில் குடிமராமத்து திட்டப் பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழகத்திலுள்ள நீர்வள ஆதாரத்துறையை சார்ந்த ஏரிகளை அந்தந்த பகுதி விவசாயிகளின் பங்களிப்புடன் புனரமைக்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கடந்த 2016-17ம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. மேலும் 2017-18ம் ஆண்டில் 328.95 கோடி மதிப்பில் 1,511 ஏரிகளை புனரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

2019-20ம் ஆண்டில் 499.69 கோடி மதிப்பீட்டில் 1,829 கண்மாய்கள் புனரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதன் தொடர்ச்சியாக புதுக்கோட்டை மாவட்டத்தில் 2020-21ம் ஆண்டில் 21.74 கோடி மதிப்பீட்டில் 43 கண்மாய்களை புனரமைப்பு செய்யும் விதமாக அரசாணை வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலத்தின் கீழ் இயங்கி வரும் தெற்கு வெள்ளாறு வடிநிலக்கோட்டம் வாயிலாக புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டை வட்டத்தின் கீழ் கவிநாடு மேற்கு கிராமம், கவிநாடு பெரிய கண்மாய் புனரமைக்கும் பணிக்கு ரூ.61 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த குளத்தின் கீழ் பாசனம் பெறும் ஆயக்கட்டு 715.88 ஹெக்டேர் ஆகும். இந்த கண்மாய் கரையின் நீளம் 4,625 மீட்டர் ஆகும். இதில் 5 குமுமிகளும், 3 கலிங்குகளும் உள்ளது. இக்கண்மாயின் கரை முழுவதும் எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக எவ்வித பராமரிப்பு பணியும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆகையால் வரும் மழைக்காலத்தில் இக்கண்மாய் தனது முழு கொள்ளளவை எட்டாமல் போகக்கூடிய வாய்ப்புள்ளது. எனவே இக்கண்மாயின் கரை முழுவதும் பலப்படுத்துதல், மடைகள், கலிங்கு பழுது பார்த்தல் உபரிநீர் வாய்க்கால் மற்றும் வரத்துவாய்க்கால் தூர்வாருதல் ஆகிய பணிகள் அவசியமாகிறது.

இக்கண்மாய்க்கு சேந்தமங்கலம் வாரியிலிருந்து நீர் வருகிறது. மேலும் இக்கண்மாயின் உபரிநீர் குண்டாற்றிற்கு செல்கிறது. மேற்கண்ட பணிகள் அனைத்தும் கவிநாடு பெரிய கண்மாய் பாசன விவசாயிகள் சங்கம் அமைத்து அச்சங்கத்தின் மூலமாக நியமன முறையில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலமாக கரையை பலப்படுத்தும் பணிகள், உபரிநீர் வாய்க்கால் மற்றும் வரத்துவாரி தூர்வாருதல், மடை 2, 3 மற்றும் 4ல் பழுது பார்த்தல், கலிங்கு எண் 2 பழுது பார்த்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட

உள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்துவதால் இந்த கண்மாயின் மூலம் பாசனம் பெறும் 715.88 ஹெக்டேர் விலை நிலங்கள் பாசனம் பெறும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் ஆலங்குடி சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள புதுக்கோட்டை நகராட்சியின் ஆய்வு மாளிகையினை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை உதவிப்பொறியாளர் உமாசங்கர், நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் த.ஜெயலட்சுமி, கோட்டாட்சியர் தண்டாயுதபாணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**